முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

E.A.No.1/2025

EP No. 14/2018

OS No. 226/2013

தேதி : 11–03–2026

(ம.சா.2) – திரு.கந்தசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் மானூர் கிராமத்தில் தான் வசிக்கிறேன் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆதார் அட்டை கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றும், ஆதார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் வீட்டிற்கு அருகில் எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் இல்லை, ஆனல் அவர் வசிக்கும் ஊரில் தான் வசிக்கிறேன், நீதிமன்றத்திலிருந்து மெயின் ரோடு வரை தொலைவு இருக்கும் என்று சாட்சி சொல்கிறார். நான் மனுதாரர் வீட்டிற்கு அருகில் தான் வசிக்கிறேன் என்று காட்ட என் வீட்டின் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் எதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் நீதிமன்றத்தின் மூலம் தங்கவேல்தேவர் என்பவர் மரகதம்மாளிடம் 15 ஆண்டுக்கு முன்பு வீட்டை கிரையம் வாங்கினார், அதற்கு கிரைய தொகையை மனுதாரர் மரகதத்திடம் பணம் கொடுத்த விபரம் தெரியும், மற்ற விபரங்கள் மனுதாரர் சொல்லி தான் தெரியும். மனுதாரர் மரகதம்மாளிடம் பணம் கொடுத்தபோது நான் உடனிருந்தேன் என்ற விபரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. நிரூபணவாக்குமூலத்திலேயே 1, 2ம் எதிர்மனுதாரர்களுக்கிடையே உள்ள பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றும், உரிய நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இம்மனுவின் மனுதாரர் எனக்கு நண்பர் என்பதால் உண்மைக்கு

மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் அளவு தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடும்போதா அல்லது கிரைய பத்திரம் போடும்போது நான் உடனிருந்தேனா என்றால் பேச்சுவார்த்தை நடக்கும்போது நான் உடன் இருந்தேன், ஆவணம் பதிவு செய்யும் போது நான் உடனில்லை, பணம் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் மனுதாரர் வீட்டில் வைத்து காலை 10 மணிக்கு கொடுக்கப்பட்டது. அப்போது மனுதாரர் எந்த வீட்டில் இருந்தார் என்றால் அதே ஊரில் வேறு வீட்டில் இருந்தார். எந்த ஆண்டு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், கிரையம் போடப்பட்டது என்றால் அதைபற்றி தெரியாது, ஆனால் சுமார் 15 ஆண்டுகள் இருக்கும், அதன்பின்னர் மனுதாரர் தான் அந்த வீட்டில் வசிக்கிறார். கிரையபத்திரம் பதிந்த பின்னர் அந்த வீட்டில் வசிக்கிறாரா என்றால் ஆமாம்.

3. கிரைய பதிவு செய்வதற்கு முன்பே மனுதாரர் மனு சொத்தில் வசித்து வந்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரிதான், கிரையம் வாங்கிய பின்னர் தான் மனு சொத்தில் வசித்தார், அதற்கு முன்பு அவரின் தகப்பனார் சுப்ரமணியம் வீட்டில் வசித்தார். மனுதாரருக்கும் மரகதம்மாளுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அப்படி அந்த வழக்கு எண் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. மனுதாரர் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே 1,2ம் எதிர்மனுதாரர்களுக்கிடையே இருந்த கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மனுசொத்தை ஜப்தி செய்திருந்தார் என்றும், அதை தெரிந்து தான் மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து மேற்படி கிரையத்தை செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு எண், வீட்டுவரி ரசீது எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், மனுதாரர் எனக்கு நண்பர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே தான் நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கும் குறுக்கு விசாரணை சங்கதிகளும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.